எண் விகிதத்தில் அரிசனங்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று இருக்கும்போது இந்த யூனியன்கள் விஷயத்திலே அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : ஆசிரியர்களை நியமிக்க சில விதி முறைகள் இருக்கின்றன. அப்படி நியமிக்கிறபோது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெயர்களைப் பெற்று நியமிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆசிரியர்கள் நியமனத்தில் வகுப்புவாரி முறைகள் கையாளப் பட வேண்டுமென்ற சட்ட முறைகள் எதுவும் பின்பற்றப்படுவதில்லை. இது நீண்ட காலமாக அமலில் இருந்து வருகின்ற ஒன்று.

கோவை தாலூகாவில் பூதான இயக்க மூலம் கிடைத்த நிலம்

* 203 **வினா—திரு. இரா. மாணிக்கவாசகம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலூகா, பெரிய நாயக்கன் பாளையம் பிர்க்கா, தொண்டாமுத்தூர் பிர்க்கா ஆகியவைகளில் கிடைத்த பூதான பூமி எவ்வளவு ஏக்கர் ?

(இ) அது எந்த அளவுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) 511 ஏக்கர், 37½ செண்ட்.

(இ) 162 ஏக்கர், 57 செண்ட்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : இந்த மாதிரி விநியோகிக்கப்பட்ட நிலத்தை அவர்கள் விற்றுவிடும்போது அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அவைகளையெல்லாம் பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு அந்த வாரியத்தின் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உள்ளூர் குழுவின் தலைவர் அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இதுவரை முடிந்தது போக மீதம் இருப்பவைகளை விரைவாகச் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

வாரியத் தலைவர், நில நன்கொடையாளர்களில் சிலர் நிலங்களை நிலக் கொடை வேள்வி வாரியத்திடம் ஒப்படைக்கவில்லை எனவும், அந்த நிலங்களை ஒப்படைக்காதிருக்கப் பல்வேறு முறைகளை அவர்கள் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலங்களை விரைவில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்குமாறு நன்கொடைப் பொறுப்பு வகிக்கும் சிறப்புத் துணை தாசில்தாருக்கு ஆணையிட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த பூதான நிலங்களை, நிலம் கொடுத்தவர்களே வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த நிலங்களில் எத்தனை ஏக்கர்கள் ஏழை எளிய நிலமில்லாத உழவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : யார் யாருக்கு எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரம் இல்லை.

திரு. என். வரதராஜன் : பூதான இயக்கத்திற்கு அரசு நிதிப் பொறுப்பில் எவ்வளவு உதவி செய்கிறது? அரசு அலுவலர்கள் தரப்பில் எந்த அளவுக்கு உதவி செய்யப்படுகிறது? பூதான இயக்கம் வரவர வலிவிழந்துகொண்டிருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : கோவை மாவட்டத்தில், பெரிய நாய்க்கன் பாளையம் பிர்க்கா, தொண்டாமுத்தூர் பிர்க்கா ஆகியவற்றில் பூதானத்தின் மூலம் கிடைத்த பூமி எவ்வளவு என்பது கேள்வி. எவ்வளவு அலுவலர்கள், எவ்வளவு நிதி மாநில அரசு உதவி செய்திருக்கிறது போன்ற பல்வேறு கேள்விகளுக்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.